# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1796/2022 P.W.2

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | தேவக்குமார் | த-பெ | மாயம்பெருமாள் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 61/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | முதன்மை மருத்துவர் பணி ஓய்வு | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.08.2026**

**எதிரி ஆஜர்.**

---

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து முதன்மை மருத்துவராக பணி செய்து தற்போது பணி ஓய்வில் உள்ளேன். ஆஜர் எதிரியை தெரியும். அசா1ஐ தெரியும். 2022 ம் ஆண்டு நான் கானாடுகாத்தான் அரசு மருத்துவமனையில் முதன்மை மருத்துவராக பணி செய்து வந்தேன். கடந்த 07.07.2022 அன்று காலை 11.30 மணியளவில் நான் மேற்படி மருத்துவமனையில் புறநோயாளி பிரிவில் பணியில் இருந்தேன். என்னுடன் டாக்டர் சதீஸ் மற்றும் சௌமியா அலுவலர்கள் பிரபா, முருகானந்தம், தர்மன் உள்ளிட்டோர் இருந்தோம். உலகப்பன் என்பவர் அங்கு வந்தார். அவருக்கு ஆதிலட்சுமி என்பவர் காலில் ஊசி செலுத்த முயன்றபோது கோவத்துடன் தன்னை தாக்க முயன்றதாக தகாத வார்த்தையில் அவரை திட்டியதாக அறிந்தேன். நான் பார்க்கும்போது ஆஜர் எதிரி அங்கு இல்லை. ஆதிலட்சுமி இடம் கேட்டபோது மேற்படி ஆஜர் எதிரியானவர் தன்னை தாக்க வந்ததாக என்னிடம் சொன்னார். செவிலியர் அனைவரும் பணி செய்ய அந்த சமயத்தில் பயந்தார்கள். மேற்படி சம்பவம் நடந்த வீடியோ You tube ல் வந்ததாக சொன்னார்கள். மேலும் இது தொடர்பாக இணை இயக்குநர் மருத்துவர் அவர்களிடம் சொன்னேன். அவர் விசாரணை செய்துவிட்டு போலீஸில் புகார் அளிக்க சொன்னார். அதன் அடிப்படையில் நான் செட்டிநாடு காவல் நிலையம் சென்று நடந்த விபரங்களை சொல்லி நடவடிக்கை எடுக்குமாறு புகார் அளித்தேன். **புகார் அசாஆ 1**. போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

நான் 07.07.2022 அன்று புறநோயாளி பிரிவில் மருத்துவராக பணி செய்தேன் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 07.07.2022 புகார் கொடுத்த தேதி 08.07.2022 என்றால் சரிதான். 08.07.2022 அன்று மாலை 7.00 மணிக்கு புகார் கொடுத்தேன் என்றால் சரியல்ல

காலை 10.30 மணிக்கு புகார் கொடுத்தேன். மருத்துவமனைக்கும் காவல் நிலையத்திற்கும் எவ்வளவு தூரம் என்றால் சுமார் 3 கிமீ இருக்கும். மேற்படி சுமார் 22 மணி நேரம் கால தாமதத்திற்கு என்ன காரணம் என்றால் கலந்து ஆலோசித்து புகார் அளித்தோம். சம்பவம் நடந்த நேரத்தில் நான் எந்த நோயாளிக்கு சிகிச்சை அளித்தேன் என்றால் புறநோயாளிக்கு பெயர் குறிப்பிட்டு சொல்லமுடியாது. புறநோயாளி அறிக்கையை முதல் தகவல் அறிக்கையுடன் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. எதிரி பணி செய்யவிடாமல் செய்ததாக புறநோயாளிகள் யாரும் சாட்சிகளாக கையொப்பம் செய்துள்ளார்களா என்றால் இல்லை. சம்பவம் நடந்த சமயத்தில் நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். 08.07.2022 அன்று எனது உயர்அதிகாரி சொன்னதன் பேரிலும் உடன் பணிபுரிந்தவர்கள் சொன்னதன் பேரிலும் இந்த புகாரை நான் அளித்தேன் என்றால் சரிதான். புகாரில் உள்ள அனைத்தும் நான் நேரில் கண்டது இல்லை என்றால் சரிதான். மற்றவர்கள் கூறியதை புகாராக கொடுத்தேன் என்றால் சரிதான். முதல் தகவல் அறிக்கை மற்றும் புகார் வாக்குமூலம் ஒரே மாதிரியாக உள்ளது என்றால் நியாபகம் இல்லை. எதிரி உலகப்பன் உள்நோயாளியா புறநோயாளியா என்றால் உள்நோயாளி. அவருக்கு செவிலியர் யாரும் இருந்தார்களா என்றால் எனக்கு தெரியாது. அவர் உள்நோயாளியாக இருந்தற்கு அட்மிசன் அறிக்கை அல்லது கேஸ் அறிக்கை காவல் துறையில் தாக்கல் செய்தேனா என்றால் இல்லை. செவிலியர் ஆதிலட்சுமிக்கும் எதிரிக்கும் நடந்த பிரச்சனையின்போது ஆதிலட்சுமி எதிரியை வக்கத்தவன் என்று திட்டியதாக தெரிந்து கொண்டேனா என்றால் இல்லை. ஆதிலட்சுமி எதிரிக்கு செலுத்திய மருந்து என்ன என்று தெரிந்து கொண்டேனா என்றால் ஆன்டிபயாட்டிக். எதற்காக மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்தார் என்றால் காலில் காயங்கள் ஏற்பட்டிருந்தது. மேற்படி காயங்கள் எரிச்சலை ஏற்படுத்தும் என்றால் சரிதான். மருந்து செலுத்தும்போது கோவங்கள் வர வாய்ப்புள்ளது என்றால் சரிதான். மருந்து செலுத்தும்போது வலி தாங்க முடியாமல் கத்துபவர்களை பார்த்துள்ளேனா என்றால் பார்த்துள்ளேன். எதிரி புகாரில் புகார்தாரை பிடித்து தள்ளியதாக சொல்லியது கேள்விபட்டது. எதிரி எந்த ஒரு அரசு பணியும் செய்யவிடாமல் தடுக்கவில்லை என்றால் சரியல்ல. எதிரிக்கும் வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல. ஆதிலட்சுமிக்கு எந்த ஒரு காயமும் ஏற்படவில்லை என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் அருகாமையில் இல்லாமல் மேல் அதிகாரிகளும் ஊழியர்களும் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கால தாமதமாக ஒரு பொய்யான புகாரை தயாரித்து எதிரி மீது பொய்யான புகாரை கொடுத்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.20 16:06:37 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
CC. No.1796/2022 P.W.3

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | பாத்திமாபீவி | க-பெ | தவுபீக் ராஜா |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 30/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | செவிலியர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.08.2026

**எதிரி ஆஜர்.**

----------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து செவிலியராக பணி செய்து வருகிறேன். அசா1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். 2022 ம் ஆண்டு நான் கானாடுகாத்தான் அரசு மருத்துவமனையில் செவிலியராக பணி செய்து வந்தபோது 07.07.2022 அன்று நான் புறநோயாளி பிரிவில் பணி செய்து கொண்டிருந்தபோது காலை 11.40 மணியளவில் என்னுடைய ஆவணங்களை நான் எடுப்பதற்காக வார்டு கட்டிடத்திற்கு சென்றேன். கடைசியாக பிரச்சனை நடந்த பின்பு அங்கு சென்றபோது அங்கு ஆதிலட்சுமி மற்றும் ஆஜர் எதிரி அங்கிருந்தார்கள். நான் கடைசியாக சென்றபோது அவர்களுக்குள் பிரச்சனை ஏற்பட்டு முடிந்துவிட்டது. அங்கிருந்த செவிலிர் மற்றும் மருத்துவ அலுவலர்களிடம் கேட்டபோது ஆஜர் எதிரி போன் பேசிக்கொண்டு ஊசி செலுத்துவதற்காக மருத்துவமனைக்கு வந்ததாகவும் அப்போது அசா1 போனை அணைத்துவிட்டு வாருங்கள் என்று சொன்னதாகவும் தாமதமாக வந்துள்ளீர்கள் என்று சொன்னதாகவும் ஆஜர் எதிரியானவர் ஊசி செலுத்த விடாமல் சண்டையிட்டு நிறைய தகாத வார்த்தைகளால் பேசி என்னுடைய நடத்தை மற்றும் குணாதிசயம் சரியில்லை என்று அசா1 இடம் சொல்லியுள்ளார். ஆஜர் எதிரி சண்டையிட்ட வீடியோ ஒன்று நியூஸ் சேனல் மற்றும் முகநூல் பதிவு ஆகியவற்றில் வந்த பின்னர் தான் முழு விபரம் தெரியவந்தது. வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். அவர்களிடம் நான் மேற்படி விபரங்களை சொன்னேன்.

**குறுக்கு விசாரணை**

07.07.2022 அன்று 11.30 மணிக்கு நான் எங்கு இருந்தேன் என்றால் புறநோயாளி பிரிவில் பணி செய்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லும் நேரத்தில் நான் அங்கு இல்லை என்றால் சரிதான். ஆதிலட்சுமி சொன்னதை நான் சொல்கிறேன் என்றால் சரிதான். சம்பவம் குறித்து எனக்கு நேரடியாக எதுவும் தெரியாது என்றால் சரிதான். youtube, முகநூல் ஆகியவற்றை வைத்து சாட்சி

சொல்லமுடியாது என்றால் சரிதான். யாரை வேண்டுமானலும் சித்தரித்து என்ன பதிவு வேண்டுமானலும் போடலாம் என்றால் சரிதான். எங்கள் மருத்துவமனையில் சிசிடிவி கேமரா இல்லை என்றால் சரிதான். போலீசார் என்னிடம் வாக்குமூலம் பெற்று கையொப்பம் வாங்கினார்களா என்றால் வாங்கினார்கள் எது சம்பந்தமாக என்று எனக்கு தெரியாது. போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க கையொப்பம் செய்தேன். நான் கொடுத்த வாக்குமூலத்தை போலீசார் வாசித்து காண்பித்தார்களா என்றால் இல்லை. எதிரியை எனக்கு தெரியாது என்றால் சரியல்ல ஊசி போட வருவார். நான் ஆதிலட்சுமி, சித்ராதேவி, ஆகியோர் ஒரே மருத்துவமனையில் பணி செய்யும் நண்பர்கள் என்றால் சரிதான். ஆகையால் ஆதிலட்சுமிக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. ஆதிலட்சுமி கேட்டுக்கொண்டதற்கு இணங்க பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் வழக்கிற்கும் எதிரிக்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றாலும் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.20 16:06:43 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# CC. No.1796/2022   P.W.4

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | சித்ராதேவி | க-பெ | வீரப்பன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 54/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | செவிலியர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.08.2026**

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து செவிலியராக பணி செய்து வருகிறேன். அசா1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். 2022 ம் ஆண்டு நான் கானாடுகாத்தான் அரசு மருத்துவமனையில் செவிலியராக பணி செய்து வந்தபோது 07.07.2022 அன்று நான் அறுவைசிகிச்சை பிரிவில் பணி செய்து கொண்டிருந்தபோது காலை 11.00 மணியளவில் சத்தம் கேட்டது. ஊசி செலுத்தும் முதல் உதவி சிகிச்சை பிரிவில் சத்தம் கேட்டது. நானும் லட்சுமிபிரியா என்பவரும் சேர்ந்து அங்கு சென்று பார்த்தபோது செவிலியர் ஆதிலட்சுமி என்பவரிடம் என்ன நடந்தது என்று கேட்டேன். அப்போது நோயாளி உலகப்பன் என்பவர் ஊசி செலுத்துவதற்காக வந்ததாகவும் அவரை படுக்கையில் அமர சொன்னபோது அவர் செல்போனில் பேசிக்கொண்டே ஊசி செலுத்த கையை தடுத்ததாகவும் சத்தமாக பேசியதாகவும் போனை மெதுவாக பேசுங்கள் என்று அசா1 சொல்லியதாகவும் அதற்கு சில தகாத வார்த்தைகால் எதிரியானவர் அசா1 ஐ திட்டியதாகவும் சொன்னார். நான் அங்கு சென்று எதிரியிடம் மெதுவாக பேசுங்கள் ஊசி செலுத்த வேண்டும் என்று கூறினேன். என்னிடம் பதில் சொல்லாமல் அசா1 ஐ பார்த்து நான் யார் தெரியுமா வருமான வரி நிறைய கட்டுகிறேன் பிச்சை காரன் கிடையாது என்றும் சொன்னார். அவரிடம் நான் இவ்வாறு பேச வேண்டாம் என்று சொன்னேன். நான் நினைத்தால் உன்னை 24 மணிநேரத்தில் கன்னியாகுமரிக்கு பணி மாறுதல் செய்துவிடுவேன் என்று சொன்னார். அந்த இடத்தை விட்டு வருமாறு அசா1 ஐ சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

வழக்கின் நான் புகார் அளிக்கவில்லை என்றால் சரிதான். போலீசார் என்னிடம் வாக்குமூலம் வாங்கினார்களா என்றால் இல்லை. எனது மருத்துவமனையில் எத்தனை வார்டு உள்ளது என்றால் 6 வார்டு உள்ளன. நான் 07.7.2022 அன்று எந்த வார்டில் பணி செய்தேன் என்றால் அறுவை சிகிச்சை வார்டில் பணி செய்தேன். அறுவை சிகிச்சை வார்டு பூட்டிய நிலையில் தான் இருக்கும்

என்றால் சரிதான். நான் சம்பவம் நடந்த இடத்திற்கு வந்த நேரம் எப்போது என்றால் காலை 11.00 மணி. சம்பவம் நடந்தபோது நான் சம்பவ இடத்தில் இல்லை என்றால் சரிதான். சம்பவ இடத்தில் வேறு நோயாளிகள் யாரும் இல்லை என்றால் இரண்டு நபர்கள் இருந்தார்கள். அவர்களிடம் சாட்சியாக கையொப்பம் வாங்கினோமா என்றால் இல்லை. முதல் விசாரணையில் சொல்லிய விபரங்கள் ஆதிலட்சுமி சொல்லியதன் அடிப்படையில் தான் சொன்னேன் என்றால் சரியல்ல சத்தம் கேட்டு வந்தோம். எதிரிக்கு எந்த ஊசி மருந்து செலுத்துகிறார்கள் என்றால் பெப்டாஸ் என்ற ஆன்டிபயாடிக் மருந்து. எதிரிக்கு எந்த இடத்தில் என்ன காயம் ஏற்பட்டிருந்தது என்றால் காலுக்கு கீழ் பகுதியில் காயம் ஏற்பட்டிருந்தது. பெப்டாஸ் மருந்து வெளி சந்தையில் எவ்வளவு என்றால் விலை தெரியாது ஆனால் விலை உயர்ந்த மருந்து. அரசு மருத்துவமனைக்கு வரும் நோயாளிகள் தனியார் மருத்துவமனையில் பார்க்க முடியாமல் தான் வருவார்கள் என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. எதிரியை பார்த்து ஆதிலட்சுமி மருந்தினை வாங்க உங்களுக்கு வக்கத்தவன் இல்லை என்று கூறியதால் தான் வாய் தகராறு ஏற்பட்டது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. மேற்படி பட்டியல் சாட்சிகள் 1 முதல் 5 வரையிலானவர்கள் ஒரே இடத்தில் வேலை செய்தோம் என்றால் சரிதான். எதிரி வேறு யாரையாவது தள்ளி அடித்தாரா என்றால் இல்லை. வாய்தகராறு மட்டுமே நடந்தது என்றால் சரிதான். நோயாளி சிகிச்சையில் இருக்கும்போது வலி தாங்கமுடியாமல் கத்துவது யதார்த்தம் என்றால் சரியல்ல. எதிரிக்கு நான் சிகிச்சை அளிக்கவில்லை என்றால் சரிதான். அரசு மருத்துவமனையில் கட்டணம் செலுத்தாமல் சிகிச்சை பெற்றார் என்ற காரணத்திற்காக ஆதிலட்சுமி எதிரிக்கு கோவம் ஏற்படுத்தும வண்ணமாக பேசியதால் வாய்தகராறு ஏற்பட்டது என்றால் சரியல்ல. உள்நோயாளியாக சிகிச்சை பெற்றார் ஆனால் மருத்துவரிடம் சொல்லிவிட்டு வீட்டிற்கு சென்றுவிடுவார். நான் சொல்வது போல் எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும் அசா1 உடன் பணி செய்யும் ஒரே காரணத்தால் அவருக்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. எதிரி எந்த ஒரு செல்போனையும் பயன்படுத்தவில்லை என்றாலும் கற்பனையாக சொல்கிறோம் என்றாலும் சரியல்ல. சிகிச்சைக்கு வந்த நோயாளியை நாங்கள் அனைவரும் சேர்ந்து கஷ்டப்படுத்தினோம் என்றால் சரியல்ல. எதிரிக்கும் இந்த வழக்கிற்கும் எவ்வித சம்பந்தமும் இல்லை என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.20 16:06:50 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
# (Chapter XXIII Code of Criminal Procedure)
# IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
# CC. No.1796/2022 P.W.5

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | ப்ரியா | க-பெ | வேல்முருகன் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 46/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | துப்புரவு பணியாளர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 18.08.2026

**எதிரி ஆஜர்.**

-----------------------------------------------------------------------------------------------

<u>முதல் விசாரணை.</u>

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து துப்புரவு பணியாளராக பணி செய்து வருகிறேன். அசா1 ஐ தெரியும். ஆஜர் எதிரியை தெரியும். 2022 ம் ஆண்டு நான் கானாடுகாத்தான் அரசு மருத்துவமனையில் துப்புரவு பணியாளராக பணி செய்து வந்தபோது 07.07.2022 அன்று அறுவை சிகிச்சை பிரிவில் காலை 11.00 மணியவில் பணியில் இருந்தபோது சத்தம் கேட்டது. அப்போது நானும் சித்ராதேவி என்பவரும் வந்து பார்த்தபோது ஆஜர் எதிரியானவர் அசா1 ஐ பார்த்து நான் எப்போது இங்கு வந்தாலும் நீ தான் ஊசி போடவேண்டும் என்று பேசினார். அசிங்கமான வார்த்தைகளால் அசா1 ஐ பேசினார். சித்ராதேவி இப்படி எல்லாம் பேசக்கூடாது என்று எதிரியை பார்த்து சொன்னார். உலக்கப்பன் அப்போது உன்னை கன்னியாகுமரிக்கு மாற்றிவிடுவேன் என்று சொன்னார். ஆஜர் எதிரிக்கு கையில் venflon செலுத்தப்பட்டு ஊசி செலுத்தப்பட்டது. அவருக்கு காலில் காயங்கள் இருந்தது. அவர் பேசிவிட்டு அங்கிருந்து சென்றுவிட்டார். வழக்கு சம்பந்தமாக போலீசார் என்னை விசாரணை செய்தார்கள். அவர்களிடம் மேற்படி விபரங்களை சொன்னேன்.

**<u>குறுக்கு விசாரணை</u>**

நான் 07.7.2022 அன்று 11.30 மணிக்கு எங்கு பணி செய்தேன் என்றால் அறுவை சிகிச்சை அறையில் துப்புரவு பணி செய்தேன். அறுவை சிகிச்சை அறையில் மருந்துகள் அடக்கி கொண்டிருந்தோம். சம்பவம் நடந்த சமயத்தில் சம்பவ இடத்தில் நான் இல்லை என்றால் சரிதான். சத்தம் கேட்டு தான் அங்கு சென்றோம் என்றால் சரிதான். நான் என்ன வேலை செய்கிறேன் என்றால் துப்புரவு பணி செய்கிறேன். எங்களுக்கு அறைக்குள் செல்ல நேரம் ஒதுங்குவார்கள் என்றால் சரியல்ல. என்னிடம் போலீசார் வாக்குமூலம் பெற்றார்களா என்றால் பெற்றார்கள். அதில் கையொப்பம் செய்தேனா என்றால் செய்தேன். எனது வாக்குமூலத்திலும் முதல் விசாரணையிலும் முன்னுக்கு பின் முரணாக சொல்கிறேன் என்றால் சரியல்ல. பிரச்சனையில் வேறு யாருக்கும்

காயம் ஏற்பட்டதா என்றால் இல்லை. நான் போலீசாரிடம் கொடுத்த வாக்குமூலத்தை என்னிடம் வாசித்து காட்டினார்களா என்றால் இல்லை. நான் சம்பவ இடத்திற்கு செல்வதற்கு முன் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். எதிரிக்கு என்ன நோய் ஏற்பட்டது என்று தெரியுமா என்றால் காலில் காயங்கள் ஏற்பட்டிருந்தது. அவருக்கு செலுத்திய ஊசி என்ன வகை என்று தெரியுமா என்றால் தெரியாது ஆன்டிபயாடிக் என்று தெரியும். ஆதிலட்சுமி என்பவர் ஊசி வெளியில் விலை உயர்வானது அதற்கு நீ வக்கத்தவன் என்று சொல்லிய விபரம் தெரியுமா என்றால் தெரியாது. நான் எதிரியை திட்டினேனா என்றால் இல்லை. அரசு மருத்துவமனைக்கு சிகிச்சை பெற வந்த நோயாளியை நாங்கள் அனைவரும் தொல்லை செய்தோம் என்றால் சரியல்ல. எதிரியை உதாசினம் படுத்தியதால் தான் அவர் வாய் தகராறில் ஈடுபட்டார் என்றால் சரியல்ல. பட்டியல் சாட்சிகள் 1முதல் 5 வரையிலானர்வர்கள் என்னுடன் பணி செய்பவர்கள் என்றால் சரிதான். பிரபா, சதீஸ், சௌமியா, முருகானந்தம் ஆகியோர் அங்கு இருந்தார்களா என்றால் இருந்தார்கள்., மேற்படி ஊழியர்கள் அங்கு இல்லை என்றால் சரியல்ல. அசா1க்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. சிசிடிவி கேமரா உள்ளதா என்றால் இல்லை. நான் செவிலியர் கிடையாது என்றாலும் நோயாளி பிரிவில் வருவதற்கு அனுமதி கிடையாது என்றாலும் நான் அசா1க்கு ஆதரவாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. நான் ஆதிலட்சுமி என்பவர் கேட்டுக்கொண்டுதற்கு இணங்க சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.20 16:06:56 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர்,
காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1796/2022 P.W.6

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | முருகானந்தம் | த-பெ | வேலாயுதம் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 57/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | ஆண் செவிலியர் | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.08.2026**

**எதிரி ஆஜர்.**

--------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து ஆண் செவிலியராக பணி செய்து வருகிறேன். அசா1 ஐ தெரியும். நான் பொதுவாக காலை 7.30 மணிக்கு புறநோயாளி பிரிவிற்கு மருத்துவமனைக்கு சென்றுவிடுவேன். அங்கு பணியை முடித்துவிட்டு உள்நோயாளி பிரிவிற்கு வருவேன். நான் வரும்போது எந்த ஒரு சம்பவமும் நடைபெறவில்லை. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள முதல் சாட்சி கையொப்பம் என்னுடையது தான். **கையொப்பம் அசாஆ 2 .** தேதி மாதம் நினைவில் இல்லை. 2022 ம் ஆண்டு நான் உள்நோயாளி பிரிவில் பணியில் இருந்தபோது சார்பு ஆய்வாளர் வந்து வரைபடம் தயார் செய்து அதில் கையொப்பம் செய்ய சொன்னார்கள். நான் கையொப்பம் செய்தேன். எதற்கு என்று கேட்டபோது நடந்த சம்பவம் தொடர்பாக என்று சொன்னார்கள். என்ன சம்பவம் என்று கேட்டதற்கு எனக்கு தெரியாது என்று சொன்னார்கள்.

**அரசு தரப்பில் கேட்டுக்கொண்டதற்கு இணங்க சாட்சியை பிறழ்சாட்சியாக கருதக்கோரி அனுமதி அளிக்கப்பட்டது.**

**அரசு தரப்பு குறுக்கு விசாரணை**

போலீசார் விசாரணையில் கடந்த 08.07.2022 அன்று 19.30 மணிக்கு செட்டிநாடு சார்பு ஆய்வாளர் கானாடுகாத்தான் அரசு மருத்துவமனைக்கு வந்து குற்ற எண்.24/2022 என்ற வழக்கு சம்பந்தமாக தகராறு சம்பவ இடத்தை பார்வையிட்டு அங்கு அவர்கள் தயார் செய்த பார்வை மகஜர் ஆவணத்தில் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்துவிட்டு தற்போது வழக்கு விசாரணையில் உண்மை சம்பவத்தை மறைத்து பிறழ் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.20 16:07:01 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர், காரைக்குடி.

# DEPOSITION OF WITNESS
## (Chapter XXIII Code of Criminal Procedure)
## IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, KARAIKUDI.
## CC. No.1796/2022 P.W.7

| | | | | |
|---|---|---|---|---|
| பெயர்: | : | தர்மன் | த-பெ | கோபால் |
| ஊர்: | : | காரைக்குடி | | |
| வயது: | : | 52/2026 | வட்டம்: | |
| தொழில்: | : | சலவையாளி | மாவட்டம் | சிவகங்கை |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of **18.08.2026**

**எதிரி ஆஜர்.**

------------------------------------------------------------------------------------------------

முதல் விசாரணை.

நான் தற்சமயம் காரைக்குடியில் வசித்து சலவையாளியாக பணி செய்து வருகிறேன். அசா1 ஐ தெரியும். கடந்த 07.07.2022 அன்று காலை 7.00 மணிக்கு கானாடுகாத்தான் அரசு மருத்துவமனைக்கு வேலைக்கு வந்தேன். அப்போது சத்தம் கேட்டது. என்ன நடந்தது என்று தெரியாது. அதன் பின்னர் நான் வேலைக்கு சென்றுவிட்டேன். போலீசார் வந்தார்களா என்றால் அது பற்றி எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். **பார்வை மகஜர் அசாஆ 3**. மேற்படி கையொப்பம் 11.00 மணியளவில் செட்டிநாடு போலீசார் வந்தார்கள். அப்போது அங்கிருந்த மருத்துவ உபகரணங்கள் உடைந்தது தொடர்பாக போலீசார் விசாரணை செய்து கையொப்பம் கேட்டார்கள். சம்பவ இடத்தை பார்வையிட்டு ஆவணம் தயார் செய்து சாட்சி கையொப்பம் கேட்டார்கள். நான் கையொப்பம் செய்தேன். போலீசார் என்னை விசாரணை செய்தார்கள்.

**குறுக்கு விசாரணை**

என்னிடம் 07.07.2022 அன்று கையொப்பம் பெற்றார்கள் என்றால் சரிதான். டார்ச் லைட் அடித்து கொண்டு சென்றோமா என்றால் இல்லை. நான் கையொப்பம் செய்த ஆவணத்தில் என்ன எழுதியிருந்தது என்று எனக்கு தெரியாது என்றால் சரிதான். போலீசார் கேட்டுக்கொண்டதற்கு இணங்க நான் கையொப்பம் செய்தேன் என்றால் சரிதான். வழக்கு பற்றி எனக்கு எதுவும் தெரியாது என்றால் சரிதான்.

சாட்சியால் திறந்த நீதிமன்றத்தில் சொல்லப்பட்டு என்னால் தட்டச்சருக்கு சொல்லப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என்று ஒப்புக்கொள்ளப்பட்டது.

KARMEGAKANNAN J

Digitally signed by KARMEGAKANNAN J
Date: 2026.08.20 16:07:06 +0530

குற்றவியல் நீதித்துறை நடுவர், காரைக்குடி.